1990 மே 3]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது கன்னியாகுமரி மாவட்டத்தில். சமுதாய நல நிலையமாக இயங்கும் மருத்துவமனையை மாற்றி அமைக்கும் திட்டம் தற்சமயம் பரிசீலனையில் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. சுப்பிரமணிய பிள்ளை : தலைவர் அவர்களே, உலகச் சுற்றுலா மையமான கன்னியாகுமரியில் தற்போது இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையத்தை முந்தைய நம் கழக ஆட்சியில் அரசு மருத்துவமனையாக இருந்தது போல் மீண்டும் படுக்கை வசதி, அறுவைச் சிகிச்சை வசதி, பிரேதப் பரிசோதனை செய்யும் வசதி, கொண்ட அரசு பொது மருத்துவமனையாக ஆக்கும் திட்டம், பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் தலைவர் அவர்களே 1—6—1987லேயே அது சமுதாய நல நிலையமாக மாற்றப்பட்டிருக்கிறது. அங்கே 15 படுக்கைகளுடன் கூடிய ஆரம்ப சுகாதார நிலையம் செயல்பட்டு வருகிறது. அரசினுடைய நிதிநிலைமைக்கேற்ப உறுப்பினர்களுடைய கருத்துக்களை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை.

*7795. திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை ராஜாஜி மருத்துவமனையில் இதுவரை எத்தனை சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை நடைபெற்றுள்ளது ?

(ஆ) இது எதனால் இடையிலேயே நிறுத்தப்பட்டது ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆறு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகள் நடைபெற்றுள்ளன.

(ஆ) இடையே நிறுத்தப்படவில்லை. தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, இங்கே தமிழ் மக்களுடைய சிறுநீரகங்கள், ஏழை எளிய மக்களுடைய சிறுநீரகங்கள் விலைபேசி விற்கப்படுவதும் அவைகள் வெளிநாட்டில் இருக்கின்றவர்களுக்குப் பொருத்தப்படுவதும் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு வந்திருக்கிறதா ? அதனால் என்னென்ன பாதிப்புகள் ஏற்படுகின்றன என்பதை அரசாங்கம் அறிந்திருக்கிறதா ?

9-40 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி மதுரை ராசாசி மருத்துவமனையில் சிறுநீரக சிகிச்சை பிரிவு இருக்கிறதா என்று கேட்டு இருக்கிறார்கள். இதிலே சிறுநீரகம் வழங்குவதிலே, வெளிநாட்டுக்கு அனுப்புவது எல்லாம் குறிப்பிட்டு இருக்கிறார்கள். அவ்வாறு அரசுக்கு எந்தப் புகாரும் வரவில்லை. தனிப்பட்டு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதேனும் குறிப்பிடுவார்கள் என்று சொன்னால் நிச்சயமாக அரசு அது குறித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அந்த புகார் எதுவும் வரவில்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். பல்வேறு நாளேடுகளில் வந்து இருக்கின்றன. இருக்கட்டும். நமது அரசு மருத்துவமனைகளிலே ஒருவருக்கு சிறுநீரகம் பொருத்தவேண்டும் என்றால் அவருடைய உறவினருடைய சிறுநீரகத்தைத் தான் பொருத்துவோம் என்று அரசு டாக்டர்கள் சொல்கிறார்கள். ஆனால் அவரே தனியார் மருத்துவமனைகளை நடத்தி வருபவர்களாக இருந்தால் நண்பரை அங்கே வரச் சொல்லுங்கள் அவருடைய சிறுநீரகத்தை நாங்கள் பொருத்தி விடுகிறோம் என்று சொல்லி விடுகிறார்கள். ஆக அரசு மருத்துவமனையில் இலவசமாக பொருத்த வேண்டும் என்றால் உறவினர் அல்லாதவர்களுடைய சிறுநீரகம் பொருந்தாது, மற்ற இடத்திலே பொருந்தும் என்று இருக்கிற ஒரு நிலை அரசுக்குத் தெரியுமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 மே 31]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று எந்த மருத்துவமனையில் எந்த மருத்துவர் எந்த நோயாளியிடத்தில் சொல்லியிருக்கிறார் என்று சொன்னால், அவருடைய வைத்திய முறைக்கு எதிராக சொல்லியிருப்பார்கள் என்று சொன்னால், அது பற்றி தனியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவார்கள் என்று சொன்னால் நிச்சயமாக அரசு நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு டாக்டர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்விக்கு ஒரு விளக்கம் சொல்ல வேண்டிய ஒரு தொடர்பு அனுபவம் எனக்கு இருக்கிறது. அதனால் நான் சொல்கிறேன். உறவினராக இருந்தால் கூட 4 பேர் அண்ணன் தம்பிகள் இருந்தால் அதிலே யாருடைய டிஸ்யூ பொருந்துகிறதோ அவருடைய சிறுநீரகத்தைத் தான் பொருத்த முடியும். இங்கே சட்டமன்ற உறுப்பினர் திரு. அதியமான் அவர்களுக்குக் கூட அவருடைய உறவினர்கள் 4 பேர் தருவதாகச் சொன்னார்கள். யாருடைய டிஸ்யூ பொருந்துகிறது என்று பரிசீலனையில் இருப்பதாக 15 நாட்களுக்கு முன்னால் சொன்னார்கள். வேறு யாராவது இருந்தாலும் கூட அன்னியராக இருந்தாலும் கூட டிஸ்யூ பொருந்துமானால் சிறுநீரகம் பொருத்தலாம். அதை அந்தந்த மருத்துவர்கள் ஆய்ந்து பரிசிலனைக்குப் பின்னால் ஏற்றுக்கொள்கிறார்கள்.

திரு. பி. என். வல்லரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசு ராசாசி மருத்துவமனையில் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை இதுவரை 6 மாற்று அறுவை சிகிச்சை தான் நடத்தப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு சுகாதார அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். இது ஏன் என்று புரியவில்லை. தென் மாவட்டங்களில் சென்னைக்கு அடுத்து மதுரை தான் முக்கிய நகரமாக இருப்பதால் இந்த சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்கு கூடுதல் நிதி வசதி அளித்து அங்கே பாதிக்கப்பட்டு இருக்கிற மக்களுக்கு.... (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் அதிகமாகச் செய்யவேண்டும் என்று சொல்கிறீர்களா?

திரு. பி. என். வல்லரசு: உதவி செய்தால் தனியார் இடத்தில் சென்று மக்கள் அவதிப்படும் நிலை ஏற்படாது. எனவே, இதை விரிவு செய்ய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் நிதி நிலைக்கு ஏற்ப உறுப்பினருடைய கருத்தை அரசு பரிசீலிக்கும்.

திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மதுரை ராசாசி மருத்துவமனையில் 6 சிறுநீரக அறுவை சிகிச்சை செய்ததாகச் சொன்னார்கள். இந்த 6-ல் வெற்றி கண்டது எத்தனை என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ? தொடர்ந்து இன்னும் அதிகமாக செய்வதற்கு வேண்டிய கருவிகள், நிபுணர்கள் ராசாசி மருத்துவமனையில் நியமிக்கின்ற திட்டம் அரசிடத்தில் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடைசியாக 31—1—1990 அன்று தமிழக அரசின் காவல் துறையைச் சேர்ந்த திரு. இராசையா என்பவருக்கு மாற்று சிறுநீரக அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. அவைகள் வெற்றி பெற்று இருக்கின்றன. அங்கே இந்தத் துறையில் ஒரு பேராசிரியர், ஒரு கூடுதல் பேராசிரியர், ஒரு ஆசிரியர், ஒரு செவிலியர் இந்த துறைக்கு ஒதுக்கி பணியாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். நான் முந்தைய கேள்விக்கு பதில் சொன்னது போல் அரசின் நிதிநிலைக்கு ஏற்ப இதை விரிவுபடுத்துவது குறித்து அரசு பரிசீலிக்கும்.

நொய்யல் ஆற்றைச் சுத்தப்படுத்துதல்.

*8871. **திரு. சி. கோவிந்தசாமி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் நகர மையத்துல உள்ள நொய்யல் ஆற்றை சுத்தப்படுத்தும் திட்டம் அரசிடம் உளளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம்.என்ன ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,